**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**OS.No.141/2003**
**நாள்.03.11.2025**
**வா.சா.1- காளிமுத்து**
**த/பெ - ராமசாமி**

**<u>12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

12. வா.சா.ஆ.1ன் படி சடையப்பகவுண்டருக்கு சர்வே எண்.1057/6ல் 1 ஏக்கர் 84 செண்ட், சர்வே எண்.1086/2ல் 2 ஏக்கர் 10 செண்ட், சர்வே எண்.1090/1ல் 1 ஏக்கர் 54 செண்ட், கிணறு ஒன்றில் 1/4 பங்கு என்றால் சரிதான்.

13. சடையப்பகவுண்டருக்கு வா.சா.ஆ.1ன் படி "அ" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்ட சொத்தை பொறுத்து பாகம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.1ன் படி சவடமுத்துகவுண்டருக்கு சர்வே எண்.1092/1ல் 6 செண்ட், சர்வே எண்.1090/2ல் 24 செண்ட், 42 செண்ட், 53 செண்ட், சர்வே எண்.1086/2ல் 1 ஏக்கர், 45 செண்ட், சர்வே எண்.1085/1ல் 15 செண்ட், சர்வே எண்.1090/1ல் உள்ள கிணற்றில் 1/4 பாகமும், சர்வே எண்.1090/1ல் உள்ள மற்றொரு கிணற்றில் 1/8 பாகமும், கொன்னாம்பட்டியில் உள்ள ஒரு வீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

15. சவடமுத்துகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கு அவருடைய இறப்பிற்கு பின்பு எனது தந்தையின் பெயரிலும், அவருக்கு பின்பு எங்களது பெயரிலும் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.4724 மேற்படி சவடமுத்துகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தைபொறுத்து எங்களது பெயரில் உள்ள பட்டா கணினி நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

16. சர்வே எண்.1057/4A, 4C, 6 மற்றும் கொன்னாம்பட்டியில் உள்ள ஒரு வீடு சம்பந்தமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.1ன் படி சடையப்பகவுண்டருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் சர்வே எண்.1086/2, சர்வே எண்.1090/1 ஆகிய சொத்துகள்

இவ்வழக்கில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். அவற்றை சடையப்பகவுண்டரே விற்றுவிட்டார்.

18. சர்வே எண்.1086/2, சர்வே எண்.1090/1 ஆகிய சொத்துக்களை சடையப்பகவுண்டர் விற்றுவிட்டார் என்பது எதன்மூலம் தெரியவரும் என்றால் பட்டா, பத்திரம் மற்றும் வில்லங்க சான்று மூலம் தெரியவந்தது.

19. சடையப்பகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட அ அட்டவணை சொத்தைபொறுத்து வில்லங்க சான்று மூலம் மேற்படி சர்வே எண்.1086/2 மற்றும் 1090/1 ஆகியவை விற்கப்பட்ட விவரம் தெரியவந்தது. மேற்படி விவரங்களை வழக்கிற்கு முன்பே தெரிந்துகொண்டதால் அவற்றை இவ்வழக்கில் காட்டவில்லை என்றால் சரிதான்.

20. அவ்வாறு வில்லங்கசான்றை பார்க்கும்போது சர்வே எண்.1057/6 ஐ விற்றுவிட்ட விவரமும் தெரிந்திருப்பேன் என்றால் சரியல்ல. அப்போது விற்கப்படவில்லை.

21. எப்போது வில்லங்கம் பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் 2003 ம் ஆண்டில் தெரிந்துகொண்டேன். சடையப்பகவுண்டர் 1962 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

22. மேற்படி வில்லங்கசான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

23. சடையப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட வேறு சில சொத்துக்களை தன்னுடைய வாரிசுகளுக்கு பாகமாக பிரித்து கொடுத்துவிட்டு தாவா சொத்துக்களை தனது வாழ்நாள் பராமரிப்புக்காக வேண்டி வைத்துகொண்டார் என்று வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்தெந்த சொத்துக்களை அவ்வாறு பாகமாக தன்னுடைய வாரிசுகளுக்கு பிரித்து கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

24. சடையப்பகவுண்டர் இறக்கும்வரை தாவா சொத்துக்களை தான் அனுபவித்து வந்தார் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

25. சடையப்பகவுண்டர் இறப்பிற்கு பின்னர் தாவா சொத்துக்களை அவரது வாரிசுதாரர்கள் அனுபவித்து வந்தார்கள் என்பதற்கான பட்டா, கிஸ்தி போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

26. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி சடையப்பகவுண்டரின் மகனான சத்தியமூர்த்தியின் மனைவி என்றால் சரிதான்.

27. 1ம் பிரதிவாதிக்கும், சத்தியமூர்த்திக்கும் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். சத்தியமூர்த்தி மின்சாரத்துறையில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். சத்தியமூர்த்தி பணியில் இருக்கும்போது மின்சாரம் தாக்கி இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆகையால் சத்தியமூர்த்தியின் பணிக்கொடைகள் அனைத்தும் அவரது ஒரே வாரிசான 1ம் பிரதிவாதி மட்டுமே பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். அவருடைய ஒய்வூதியத்தை நாளது தேதிவரை 1ம் பிரதிவாதி மட்டும் பெற்றுவருகிறார் என்றால் சரிதான்.

28. தாவா சொத்துக்களை 05.11.2003ம் தேதி வழக்கின் 1ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

29. இவ்வழக்கை 25.11.2003ம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

30. 6ம் பிரதிவாதி சுப்பையன் கிரையம்பெற்ற பின்பு அவரது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த விவரம் தெரிந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

31. 6ம் பிரதிவாதி சுப்பையன் 05.01.2015ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

32. அதன்பின்னர், சுப்பையனின் வாரிசுகளிடமிருந்து 12ம் பிரதிவாதி 25.04.2018ம் தேதி தாவா சொத்துக்களில் முதல் அட்டவணை சொத்தில் 3வது அயிட்ட சொத்தான சர்வே எண்.1057/6 ஐ கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

33. 12ம் பிரதிவாதி கிரையம் பெற்றதன் அடிப்படையில் பட்டா வாங்கிகொண்டார் என்றால் சரியல்ல.

34. 12ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின்பு பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், அது தெரிந்தும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

35. வழக்கு சொத்துக்களை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்பதற்கு பட்டா, கிஸ்தி போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

36. 6ம் பிரதிவாதி மற்றும் 12ம் பிரதிவாதி வாங்கிய கிரையப்பத்திரங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இவ்வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

37. 12ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதை நாங்கள் இடைஞ்சல் செய்ததாக வேடசந்துர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.188/2018 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

38. சர்வே எண்.1057/6 க்கு கட்டுப்பட்ட சொத்தை 19.08.1956ம் தேதி சடையப்பகவுண்டர் சின்னம்மாள் என்பவருக்க கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றாலும், பிராதில் கூறியுள்ளபடி அவர் இறக்கும்வரை மேற்படி சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏதும் செய்யவில்லை என்று வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

39. சின்னம்மாளிடமிருந்து மேற்படி 19.08.1956 தேதியிட்ட கிரைய ஆவணத்திற்கு கட்டுப்பட்ட சொத்தை 02.07.1964ம் தேதி சத்தியமூர்த்தி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அதனால் பணியில்இருக்கும் போது இறந்துபோன சத்தியமூர்த்தியின் ஒரே வாரிசான 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

40. 19.08.1956ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி சடையப்பகவுண்டர் கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் அச்சொத்தில் அவருக்கே எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் இவ்வழக்கில் நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B — Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**